ந.க.எண்.21720/2011/இ3

பேரூராட்சிகள் இயக்ககம்,
குறளகம், சென்னை–108
நாள். 14 .05.2012

## சுற்றறிக்கை

பொருள் - பொதுசுகாதாரம் – டெங்கு காய்ச்சல் பரவுதல் – முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது – நடவடிக்கையினை தீவிரப்படுத்துதல் – தொடர்பாக

பார்வை - இவ்வியக்கக சுற்றறிக்கை ந.க.எண்.21720/2011/இ3 நாள் 08.05.2012

----

பார்வையில் காணும் இவ்வியக்கக சுற்றறிக்கையின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

பேரூராட்சி பகுதிகளில், டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக பார்வையில் காணும் சுற்றறிக்கையின் மூலம் ஏற்கனவே விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், டெங்குகாய்ச்சல் பராவாமல் தடுப்பது குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதல் தொடர்பாக அரசுச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அவர்களால் 14.5.2012 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி கீழ்காணும் கூடுதல் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இவற்றை பின்பற்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செயல்படுத்த அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

1) மாவட்ட பொது சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். டெங்கு காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயல் அலுவலர்கள் நேரில் சென்று நோய் தடுப்பு நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கென மக்கள் நலத் துறை மருத்துவர்கள் தங்களைத் தொடர்பு கொள்ளும் வரை காத்திராமல் தாங்களாகவே சம்மந்தப்பட்ட பொது சுகாதாரத் துறை துணை இயக்குநர்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களை தொடர்பு கொண்டு அவர்களால் வழங்கப்படும் அறிவுரைகளின்படி செயல்பட வேண்டும்.

2) டெங்கு காய்ச்சால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தொடர்ந்து செயல் அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் கண்காணித்து வர வேண்டும்.

3) டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை பேரூராட்சி வாரியாக அறிக்கை சமர்ப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த சுற்றறிக்கையினை கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒம்/– மா.சந்திரசேகரன்,
இயக்குநர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.

/உத்திரவுப்படி/

இயக்குநருக்காக
17/5/2012

14/5/2012